www.Padasalai.Net www.TrbTnpsc.com

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**மார்ச் - 2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள்**

**மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்தல் & விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்தல்**

**செய்திக்குறிப்பு**

**I. மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் செய்தல்:**

மார்ச் - 2025 பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) 12.05.2025 **அன்று காலை 11.00 மணி முதல்** பெற்றுக் கொள்ளலாம் அல்லது www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று HSE -II Year March-2025 – Statement of Marks பக்கத்தில் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification பகுதியில் சென்று HSE -II Year March-2025 – Statement of Marks பக்கத்தில் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**II. விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பம் செய்தல் :**

விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் 13.05.2025 (**செவ்வாய்க்கிழமை**) **காலை 11.00 மணி** முதல் 17.05.2025 (**சனிக்கிழமை**) **மாலை 5.00 மணி** வரை விண்ணப்பிக்கலாம். +1 Arrear தேர்வர்களும் விடைத்தாள் நகல் கோரி மேற்கண்ட நாட்களில் விண்ணப்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடத்திற்கும் விடைத்தாளின் நகல் (Copy of the answer script) பெறுவதற்கான கட்டணம் ரூ.275/-. தேர்வர்கள் விடைத்தாள்களின் நகலிற்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்.

-2-

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்களுக்கு மட்டுமே பின்னர் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.**

விடைத்தாளின் நகலினை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் பின்னர் ஊடகங்கள் மற்றும் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்படும்.

**விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்களுக்கு மறுகூட்டல் / மறுமதிப்பீடு செய்திட விண்ணப்பிப்பதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**ஒம்/-**

**இயக்குநர்**

**இடம்: சென்னை-6**

**நாள்:** 08 .05.2025

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com